# The Tea Novel Reflects The Life of Tea Plantation Workers

**J. Clemy Jeni Priya**
*Research, Scholar, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil*
*Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. J. Benny**
*Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil*
*Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255919

**Abstract**
*The novel Tea written by Daniel Selvaraj meticulously records the life of tea plantation workers. It can be seen that there are comments about the cramped and inadequately equipped housing called layam. It can be seen that they have the habit of drinking blackcurrant with tea. They also call tea by names such as teth water, kadichchan water, and teailaikashayam. The workers worship their ancestral deity, Koothanachi Amman, and have beliefs in sacrifice, rituals, and ghost worship. It shows how the workers are cheated through the account called puranottu. This research article indicates that tea plantation workers rely on traditional medical methods and beliefs instead of modern medical facilities.*
***Keywords:*** *Karupatti, Katichanthanni, Puranottu, Layam*

**References**
1. Senthil, Ku. “Tribal Culture Medicine”. Sanlax International Tamil Studies Research Journal, Volume Two, Issue Four, April, 2018.
2. Semmuthai Sadasivam. Social Thoughts of South Pandya Country Writers. Semmuthai Publications, Chennai, 2015.
3. Selvaraj, T. Malarum Sarugum. New Century Book House (P) Ltd., Chennai, 2022.
4. Selvaraj, T. Theneer. New Century Book House (P) Ltd., Chennai.
5. Vedhanayagam, K.V. Erode District Minor Deity Worship. Thannanane Publications, Chennai, 2003.

# தேநீர் நாவல் பிரதிபலிக்கும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியல் சித்தரிப்பு

***ஜோ. கிளம்மி ஜெனி பிரியா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, திருநெல்வேலி

***முனைவர் ஜோ. பென்னி***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***
*டேனியல் செல்வராஜ் எழுதிய தேநீர் நாவல் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியலை நுட்பமாக பதிவு செய்கிறது.லாயம் என்று அழைக்கப்படும் போதிய வசதி இல்லாத குறுகி அறைகளைக் கொண்ட குடியிருப்பைப் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதை காணலாம். தேநீருடன் கருப்பட்டி சேர்த்து பருகும் பழக்கம் இவர்களிடம் காணப்படுவதை அறிந்துக்கொள்ளலாம்.மேலும் தேநீரை இவர்கள் தேத்தண் ணீர், கடிச்சான் தண்ணீர், தேயிலைக்கஷாயம் என்னும் பெயர் சூட்டி அழைக்கின்றனர். தொழிலாளர்கள் தங்களின் குலதெய்வமான கூத்தநாச்சி அம்மனை வழிபடுவதுடன் பலி, சடங்குகள் மற்றும் பேய் வழிபாடு குறித்த நம்பிக்கைகளையும் கொண்டவர்களாக உள்ளனர். புறநோட்டு எனப்படும் கணக்கு மூலம் தொழிலாளர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் கூறுகிறது. தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் நவீன மருத்துவ வசதிகளுக்கு பதிலாக பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் நம்பிக்கைகள் சார்ந்திருப்பது குறித்து இந்த ஆய்வுக்கட்டுரை குறிப்பிடுகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *கருப்பட்டி, கடிச்சான்தண்ணி, புறநோட்டு, லாயம்*

## முன்னுரை

இன்றைய காலக் கட்டங்களில் படைக்கப்படும் இலக்கியங்களானது பல்வேறு வகைமைகளில் வளர்ச்சியடைந்துள்ளன. மக்களின் வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைக்கும் பல தற்கால இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. இவ்விலக்கிய வகைமைகளில் நாவல்களுக்கும் இடமுண்டு. மனிதனின் அன்றாட வாழ்வில் நிகழும் செயல்களுக்கு இலக்கியங்களில் உயிரும் உணர்ச்சியும் கொடுத்து கற்பனையாகப் படைப்பாளர்களால் படைக்கப்படுகிறன. அச்சிறப்புமிக்க படைப்பாளர்களில் ஒருவர் டேனியல் செல்வராஜ். இவர் இயற்றிய தேநீர் நாவலில் குறிப்பிடப்படும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியலைப் பற்றி ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குடியிருப்பு

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகள் பொதுவாக லேபர்கள் லைன் அல்லது தோட்டக் குடியிருப்புகள் என்று அழைக்கப்படுகிறன. நீலமலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் வாழிடத்தை லாயம் என்னும் சொல்லால் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பலதலைமுறைகளாகத் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் இந்த லாயங்களில் தான் வாழ்ந்து வருகின்றனர். இந்த குடியிருப்புகள் பெரும்பாலும் ஒரே அறை அல்லது சிறிய வீடுகளைக் கொண்டவை. குடிநீர், மின்சாரம், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் போதிய அளவு இல்லாமலும் இருக்கும். தொழிலாளர்கள் 10 அடி காமிராவில் தங்களின் வாழ்க்கையை நடத்துகின்றனர். பத்தடி காமிராவில் ஒரு குடும்பம் வசிப்பதற்கு போதுமான வசதிகள் இருக்காது. இந்தச் சூழலில் அங்கு மூன்று குடும்பங்கள் வசிக்கின்றனர்,

"மூன்று குடித்தனங்களைக் கொண்ட அந்த பத்தடி காமிராவுக்குள் திருமணமான அந்த வாலிபப் பெண் தன் கைப்படும் அளவு தூரத்தில் மரம்பெட்டி வேலாண்டியும் அவன் மனைவியும் தம்பத்திய சுகம் அனுபவிப்பதை எத்தனை நாளைக்கு தான் பார்த்து தன் உணர்வுகளை எல்லாம் கொண்டு நசுப்பித்துக் கொண்டிருக்க முடியும்"

(தேநீர், பக்.11)

மேற்கண்ட வரிகளின் மூலம் ஆசிரியர் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்பைப் பற்றிய அவலநிலையைக் காட்சிப் படுத்தியுள்ளார். மேலும், செம்முதாய் சதாசிவம் அவர்களும்,

**"ஆடுமாடுகளைப் போன்று இருளடைந்த லாயங்களில் தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாக அடைக்கப்பட்டிருந்தனர்."**

**(தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின் சமூகச் சிந்தனைகள், பக்.8)**

என்று தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்பைப் பற்றி கூறியுள்ளார். நாடு சுதந்திரம் அடைந்து விட்ட போதும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வு அடிமை வாழ்வாகவே காணப்படுவதை இவ்வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

### தேநீர்

தேநீர் என்பது உலகம் முழுவதும் மிகவும் பிரபலமான பானமாகும். காலையில் புத்துணர்ச்சிக்காகவும் மாலையில் ஓய்வுக்காகவும் அருந்தப்படுகிறது. தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் முக்கிய பானமாக தேநீர் காணப்படுகிறது. தேநீரை இவர்கள் தேத்தண்ணீர், கடிச்சான்தண்ணி, தேயிலைக் கஷாயம் என்று பெயர்சூட்டி அழைக்கின்றனர். இவர்கள் தேநீரைத் தகரக் குவளையில் பருகுகின்றனர். அவ்வாறு தேநீரைப் பருகும் போது கருப்பட்டி துண்டினையும் சேர்த்து பருகுகின்றனர். எவ்வாறெனில் கொதிக்கும் தேநீரை இடது கையில் எடுத்துக்கொண்டு வலது கையில் கருப்பட்டி துண்டினை எடுத்துக் கடித்த பின்னர் தேநீரை பருகுகின்றனர். இதனை,

**"முகத்தைக் கூட கழுவ சோம்பல் பட்ட பேச்சி, பக்கத்தில் இருந்த மண் பானையைத் துளாவி உள்ளே கிடந்த கருப்பட்டி துண்டு ஒன்றை எடுத்துக் கன்னத்தில் குதப்பி ஒரு மிடறு தேத் தண்ணீரைக் குடித்த வண்ணமே"**

**(தேநீர், பக்.10)**

என்கிற வரிகளின் வாயிலாக தேநீர் பருகும் விதத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். தேநீருடன் கருப்பட்டி துண்டினைச் சேர்த்து பருகுவதால் இதனை கடிச்சாண்தண்ணி என்று அழைக்கின்றனர்.

### தெய்வ வழிபாடு

தெய்வ வழிபாடு என்பது மனிதர்களின் நம்பிக்கை மற்றும் ஆன்மீக வாழ்க்கையின் ஒரு முக்கியப் பகுதியாகும். இது ஒவ்வொரு கலாச்சாரத்திலும், சமூகத்திலும் பல வடிவங்களில் மாறுபடுகிறது. நீலமலை எஸ்டேட்டில் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் கூத்தநாச்சித் தாயை தங்களின் தெய்வமாக வழிபடுகின்றனர். எஸ்டேட் மேற்கு மலையில் கூத்தநாச்சித்

தெய்வத்திற்கென்று தனி பீடம் அமைத்து வழிபடுகின்றனர். தான் வேண்டிய வரம் கிடைத்துவிட்டால் கூத்தநாச்சி அம்மனுக்கு செம்மறி ஆடை பலிக்கொடுக்கும் பழக்கமும், கூத்தநாச்சி அம்மனுக்கு பால் ஊத்தும் பழக்கமும் காணபபட்டுள்ளதை,

**"கூத்தநாச்சி அம்மன் கோயில்லே கொண்டு பால் ஊத்தினயா? நேந்துக்கிட்டிருந்தேயே?"**

***(தேநீர்,பக்.30)***

என்னும் வரிகளின் மூலம் ஆசிரியர் தெளிவுப்படுத்துகிறார்.

கூத்தநாச்சிக் கோவிலானது தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கோவிலின் தோற்றம் பற்றிய புராணக்கதை பிரிட்டிஷ் காலத்துடன் தொடர்பு உடையது. கூத்தநாச்சி எனும் பெண்ணை ஆங்கிலேயர் ஒருவர் வலுக்கட்டாயமாக அடைய முற்படுகிறார். இதனால் அப்பெண் கண்ண கிடம் பிரார்த்தனை செய்ய ஓடி வருகிறாள். கூத்தநாச்சிக் கண்ணகிடம் இந்த மரம் இரண்டாக பிளந்து தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று சத்தமாகக் கூறினாள். உடனே மரம் இரண்டாக பிளந்ததும், கூத்தநாச்சியார் மரத்தில் தன்னை மறைத்துக் கொண்டார். ஆனால் அவளுடைய சேலைத்துண்டு வெளியே நிண்டுக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட வெள்ளைக்காரத்துரை அவளை வெளியே இழுக்க முயன்ற போது மின்னல் தாக்கி இறந்தார். இதைக் கேட்ட உள்ளூர் வாசிகள் அவளை கூத்தநாச்சியம்மன் என்று வணங்கினர். அவளுக்காக ஒரு கோயிலையும் கட்டி தெய்வமாக வழிபட தொடங்கினர். இன்றளவும் இக்கோயிலில் கூத்தநாச்சி அம்மனுக்கு பூசைகள் மற்றும் பரிகாரங்கள் செய்து வழிபடுகின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் இருக்கும் வெள்ளைக்காரனுக்கென்று தனியாக கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாலயத்திற்குச் செல்ல கருப்பின மக்களுக்கு அனுமதி கிடையாது. ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆலயங்களில் சிறப்பு வழிபாடு நடந்தேறும்.

**"கருப்பு மனிதர்களின் வாடை கூட அங்கு புதைக்கப்பட்டிருக்கும் வெள்ளை பிணங்களுக்கு தட்டுப்பட்டு விடக்கூடாது என்றோ என்னமோ கோவில் நிலம் முழுமையும் முள்வேலி போட்டு அடைத்து காவல் காத்து வருகின்றனர் எஸ்டேட் துரைத்தனத்தார்"**

***(தேநீர், பக்.97)***

மேற்குறிப்பிட்ட கூற்றிலிருந்து வெள்ளைக்காரன் கூலி தொழிலாளர்கள் மீது இனவெறியுடன் இருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.

## பேய் வழிபாடு

பேய் வழிபாடு என்பது கலாச்சாரங்களில் காணப்படும் பாரம்பரிய நம்பிக்கை சார்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது. இறந்த முன்னோர்களின் ஆன்மாக்களை சாந்தப்படுத்துவதற்கும், ஆசிர்வாதம் பெறுவதற்கும் நடந்தேறும் சடங்குகள் பேய் வழிபாடு என அழைக்கப்படுகிறது. உயர் அதிகாரிகளால் பல கூலித்தொழிலாளி பெண்கள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கோமதி என்னும் பெண் உயர் அதிகாரியால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு இறந்து விடுகிறாள். இறந்த பெண்ணின் ஆவி ஊருக்குள் அலைவதாக மக்கள் அனைவரும் நம்புகின்றனர். அப்பெண்ணின் ஆவியை விரட்ட ஹனுமர் மந்திரத்தைப் படித்து, சாராயத்தையும் கருங்கோழியையும் பலியிடுகின்றனர். இவ்வாறு செய்வதால் அப்பெண்ணின் ஆவி வெளியேறிவிடும் என்று மக்கள் நம்புகின்றனர். நாட்கள் செல்ல செல்ல அப்பெண்ணின் ஆவியைத் தங்களைக் காக்கும் ஊர்க்காவல் தெய்வமாக பாவித்து சூடம், சாம்பிராணி மற்றும் சிறப்பு நாட்களில் உயிர்பலி கொடுத்தும் வணங்குகின்ற தகவலினை,

**“வெள்ளைக்காரன் அவளை அநியாயமாகக் கற்பழித்துக் கொன்ற இடத்தில் சூடம், சாம்பிராணி போட்டு வணங்குகின்றார்கள். சில விசேஷ நாட்களில் சேவலையும் பலி கொடுத்து குருபூஜை போடுவார்கள்”**

***(தேநீர், பக்.33,34)***

என்னும் வரிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. பேய் குறித்த நம்பிக்கை பல்வேறு இன மக்களிடமும் காணப்படுவதை,

***“பூசாரி பேய் ஓட்டும் போது அதற்கு விருப்பமான சுருட்டு, பீடிகள், கள், சாராயம், கோழிக்கறி போன்றவற்றைப் படைத்துப் பூசை போட்டு விரட்டுவதைக் காணமுடிகிறது.”***

***(ஈரோடு மாவட்ட சிறுதெய்வ வழிபாடு, பக்.45)***

என்னும் குறிப்புகளால் அறியலாம். பேய்களை விரட்ட மது மற்றும் மாமிசங்களைப் படைக்கும் பழக்கவழக்கங்கள் இன்றளவும் உள்ளன.

### புற நோட்டு

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் வரவு செலவுகளைப் பதிவு செய்யும் ஒரு கணக்குப் புத்தகமே புறநோட்டு ஆகும். இந்நாவலில் குறிப்பிடப்படும் தேயிலைத் தோட்ட கூலித் தொழிலாளர்களுக்கு சிறப்பான முறையில் தான் முன்பணம் வழங்கப்படுகிறது. எவ்வாறெனில் முன்பணம் பெற்றுக்கொள்ளப் போகின்ற குடும்பங்களுக்கு முதலில் கங்காணி மது மற்றும் மாமிச விருந்து அளிப்பான். அவ்விருந்தை உண்டு களித்து போதைக் கிறக்கத்தில் இருக்கும்போது கங்காணி கூலிக் குடும்பத்திற்கு வழங்கப்படும் பேரேடு கணக்கை வாசித்துக் காட்டுவான். பின்னர் தனக்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு மீதி பணத்தை கூலித் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் செய்தியினை,

**“தன் பேரேடு கணக்குப்படியான பணத்தைப் பிடித்துக் கொண்டு சொச்சத்தைத்தான் அவர்களுக்கு அட்வான்ஸாகக் கொடுப்பான்”**

***(தேநீர், பக்.53)***

என்ற நாவல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனாலும் தலைக் கிறக்கத்தில் இருக்கும் எந்த ஒரு கூலித் தொழிலாளியும் கங்காணியின் கணக்கில் குறைக் கண்டதில்லை. இதைப் போல் நாடார் இன விவசாயக் கூலி மக்களிடமும் இப்பழக்கம் இருந்ததை,

**“சர்க்காரிலிருந்தே விவசாயிகளின் பெயரைச் சொல்லி விதை நெல்லும் உரம் வாங்கிக் கொண்டார். சொசைட்டிப் பணத்தை எடுத்து தன் பெயருக்கு பிராமிசரி நோட் எழுதி வாங்கிக்கொண்டு விவசாயிகளுக்கு கடன் கொடுத்தார்,”**

***(மலரும் சருகும், பக். 114)***

எனும் நாவல் வரிகள் காட்சிப்படுத்துகின்றன. நாடார் இன விவசாயக் கூலி மக்களின் பெயரை குறிப்பிட்டு செல்வாக்கு நிறைந்த தலைவர்கள் அரசாங்கத்திடமிருந்து பணம் வாங்குவர். அவ்வாறு வாங்கிய பணத்தை பிராமிசரி நோட்டுப் போட்டுச் செல்வாக்கு நிறைந்தவர்கள் தங்கள் பெயரில் ஏழைகளுக்குக் கடனாகக் கொடுக்கின்றனர்.

### மருத்துவக் குறிப்புகள்

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் மருத்துவ நிலையும் அவர்களுக்கு கிடைக்கும் மருத்துவச் சேவைகளும் ஒரு சிக்கலான விஷயமாகவே உள்ளன. இவர்களின் வேலைச் சூழல் மற்றும் வாழ்க்கை முறையில் பலவிதமான உடல்நலப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இவர்களுக்கு ஏற்படும் உடல் நலப் பிரச்சினைகளை எதிர்கொள்ள மருத்துவமனைகளை நாடுவதில்லை. மாறாக தங்கள் வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டு வைத்தியம் பார்க்கின்றனர். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதினால் ஏற்படும் சேற்றுப் புண்ணை சரி செய்ய புண் இருந்த இடத்தில் வெந்நீரில்

உப்பைக் கலந்து ஒத்தடம் கொடுக்கின்றனர். இதனால் அப்புண் ஆறி விடுகிறது. தோட்டங்களில் உள்ள அட்டைகள் கடிக்காமல் தங்களை தற்காத்துக் கொள்ள போலை பொடியென்னும் ஒருவகைப் பொடியைப் பயன்படுத்துகின்றனர். காய்ச்சல் வந்தால் சாராயத்தை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். மேலும் காய்ச்சலுக்கு மருந்தாக வெள்ளைப்பூண்டு தைலத்தை அருந்துகின்ற செய்தியினை,

> **"சர்வலோக நிவாரணியாக தான் தயாரித்து வைத்திருக்கும் வெள்ளைப் பூண்டு தைலத்தை ருக்மணிக்கு குடிக்க கொடுத்து விட்டு, மடியில் இருந்த விபூதிப் பையை எடுத்து ஏதோ வாய்க்குள் மந்திரம் மாதிரி முணுமுணுத்து விட்டு சாம்பலை அவள் உச்சந்தலையிலும் தூவி நெற்றிலும் பூசினாள்."**
>
> **(தேநீர், பக்.107)**

என்கிற வரிகளானது சுட்டிக்காட்டுகிறன. இதைப்போல்,

> **"தலைக்கனம் (தலைப்பாரம்), கண்வலி, உடம்பு சூடு, வயிற்றுவலி, காயம்பட்ட புண், எலும்பு முறிவு, சொறி, சிரங்கு, வாந்தி, விஷக்கடி, முள்தைத்தப்புண், மகப்பேறு, தாய் உடல் நலம் பேணுதல், மஞ்சள்காமாலை போன்ற நோய்களுக்கு மூலிகை மருந்தைப் பயன்படுத்தி வருகின்றனர்."**
>
> **(முனைவர். கு. செந்தில்)**

என்ற ஆய்வுக்கட்டுரை வரிகளின் மூலம் நீலகிரி மலையின மக்களான கோத்தார்கள் இயற்கையில் கிடைக்கும் மூலிகை மருந்தைக் கொண்டு வைத்தியம் செய்கின்றதை அறிந்துக்கொள்ள முடிகிறது.

### முடிவுரை

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தேயிலைச் செடிகளின் பசுமைக்குள் அடங்கியுள்ளது. கடினமான வேலை, குறைவான ஊதியம் மற்றும் அடிப்படை வசதிகளில் உள்ள குறைபாடுகள் என பல சவால்களுக்கு மத்தியில் அவர்கள் தங்களுக்கான ஒரு தனித்துவமான கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளனர். அவர்களின் தேநீர், தெய்வ வழிபாடு குடியிருப்பு மற்றும் மருத்துவ குறிப்புகள் குறித்த செய்திகள் பல தலைமுறைகளாகக் கடத்தப்படும் பாரம்பரியங்களில் ஒன்றாக காணப்படுகிறது. தேநீர் நாவலை முழுமையாக ஆராயும் போது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பற்றிய ஆழமான கண்ணோட்டத்தை அளிக்கிறது. இந்நாவல்வழி அவர்கள் அடையும் பிரச்சனைகளை இனிவரும் காலங்களில் களையவும், அவர்களுக்கு ஏற்ற உதவியினையும் செய்து அவர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்கான முயற்ச்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்

### துணை நூற்பட்டியல்


1. செந்தில், கு. "பழங்குடியினர் பண்பாடு மருத்துவம்". சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி இரண்டு, இதழ் நான்கு, ஏப்ரல், 2018.
2. செம்முதாய் சதாசிவம். தென்பாண்டி நாட்டு படைப்பாளர்களின் சமூக சிந்தனைகள். செம்முதாய் பதிப்பகம், சென்னை, 2015.
3. செல்வராஜ், டி. மலரும் சருகும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2022.
4. செல்வராஜ், டி. தேநீர்.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
5. வேதநாயகம், க.வி. ஈரோடு மாவட்டச் சிறுதெய்வ வழிபாடு, தன்னனானே பதிப்பகம், சென்னை, 2003.